بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 19/11/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

சஹாபாவின் முந்தைய நிலை மற்றும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஏற்பட்ட புரட்சியைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்று கொண்ட சம்பவத்தை உதாரணமாக எடுத்துரைத்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது சகோதரியும் மைத்துனரும் திருக்குர்ஆன் ஓதக் கேட்டதும் அழ ஆரம்பித்தார்கள். வேகமாக ஓடி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். 'நான் தங்களைக் கொல்வதற்காகத் தான் வீட்டிலிருந்து புறப்பட்டேன். ஆனால், நானே இரையாகிவிட்டேன்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த சஹாபாவேதான் முதலில் மது அருந்தி வந்தார்கள். தங்களுக்குள் சண்டையிட்டு வந்தார்கள். ஆனால், அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு மார்க்கத்துக்காகத் துணிச்சலையும் முயற்சியையும் மேற்கொண்டார்கள். பிறகு, தாம் மட்டுமே உயர்தரத்தை அடைந்துவிடவில்லை. இன்னும் சொல்வதென்றால், மற்றவர்களையும் உயர்தரத்திற்குக் கொண்டு சேர்ப்பதற்குக் காரணமாகத் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இறைவன் மீது கொண்டிருந்த அச்சத்தின் நிலை எப்படி இருந்ததென்றால், அன்னார் கூறிவந்தார்கள்: ஃபுராத் நதிக்கரையோரம் ஓர் ஆடு இறந்து போனாலும் அல்லாஹ் கியாமத் நாளன்று என்னிடம் கேள்வி கேட்பான் என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறக்கேட்டிருக்கிறேன்: 'கத்தாபின் மகனே! நீ நிச்சயம் அல்லாஹ்வுக்கு அஞ்சு. இல்லை என்றால், நிச்சயமாக அவன் உனக்குத் தண்டனை அளிப்பான்.' அன்னாருடைய மோதிரத்தில் இந்தச் சொற்கள் பொறிக்கப்பட்டிருந்தன:

'அறிவுரை கூறும் விதத்தில் மரணம் போதுமானது.'

அப்துல்லாஹ் பின் ஷஹ்ஸாத் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தேம்பி தேம்பி அழுவதைக் கேட்டேன். அப்போது நான் கடைசி ஸஃப்பில் இருந்தேன். அன்னார் இந்த வசனத்தை ஓதிக் கொண்டிருந்தார்கள்:

إِنَّمَآ أَشْكُوْا بَثِّيْ وَحُزْنِيْٓ إِلَى اللّٰهِ

அதாவது, நான் எனது மனவருத்தத்தையும் கவலையையும் அல்லாஹ்விடம் மட்டுமே முறையிடுகிறேன்.

**இந்த அறிவிப்பை எடுத்துரைத்து ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்:** இறைவனை நினைவு கூருவதில் திளைத்திருப்பவர்களுக்குத் தமது மனவேதனையும் துயரத்தையும் கூறி அழுது தமது நெஞ்சங்களின் சுமையை இறக்கி வைப்பதற்கு இறைவனைத் தவிர வேறு யாருடைய அரசவையும் கிடைப்பதே இல்லை.

தொண்டாற்றிய, தியாகம் செய்த பழைய மக்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த அளவு கருத்திற் கொண்டார்கள் என்றால், ஒருமுறை சற்று விலையுயர்ந்த போர்வைகள் வந்திருந்தன. அன்னார் அவற்றைப் பகிர்ந்தளித்தார்கள். 'உஹது போர் நாளன்று உம்மு சலீத் அவர்கள் எங்களுக்காகத் தண்ணீர்ப் பைகளை சுமந்து கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள்' என்று கூறியவாறு ஹஸ்ரத் உம்மு சலீத் அவர்களுக்கு உரிமையிருப்பதாகக் கூறி வழங்கினார்கள்.

ஒரு பெண் தனது கணவரின் மரணத்திற்குப் பிறகு ஏற்பட்ட சிரமங்களைக் கூறி, தான் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்த கஃப்பாஃப் பின் அய்மா கஃப்பாரீ உடைய மகள் என்று கூறினார். இதைக் கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நின்றுவிட்டார்கள். அன்னார் 'ஆஹா! மிகவும் நெருக்கமான தொடர்பு' என்று கூறினார்கள். பிறகு வலுவான ஓர் ஒட்டகத்தின் மீது தானிய மூட்டைகளை ஏற்றினார்கள். ஆண்டு முழுவதற்குமான பணத்தையும் ஆடைகளையும் வைத்தார்கள். ஒட்டகத்தின் கடிவாளத்தை அந்தப் பெண்ணின் கையில் கொடுத்துவிட்டார்கள். மேலும், 'இது தீர்வதற்குள் அல்லாஹ் உங்களுக்கு இன்னும் கொடுத்து விடுவான்' என்று கூறினார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இருட்டிய பிறகு பல வீடுகளுக்குள் நுழைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அன்னாரைப் பார்த்து விட்டார்கள். அடுத்த நாள் காலை ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அந்த வீடுகளில் ஒரு வீட்டுக்குச் சென்றார்கள். அங்கு ஒரு கண்பார்வையற்ற மூதாட்டி இருந்தார். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கேட்டதன் அடிப்படையில், 'இரவு என் வீட்டுக்கு வந்தவர் நீண்ட காலமாக எனக்குத் தொண்டாற்றுகிறார். என்னுடைய வேலைகளைச் செய்கிறார். எனது அசுத்தத்தை அகற்றுகிறார்' என்று அந்த மூதாட்டி கூறினார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவிலிருந்து திரும்பும் போது, பயணக்குழுவை விட்டு விலகி மக்களின் நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்காகப் புறப்பட்டார்கள். தூர தொலைவில் ஒரு கூடாரத்தில் ஒரு மூதாட்டியிடம் நலம் விசாரித்தார்கள். அந்த மூதாட்டி, 'இறைவன் என் தரப்பிலிருந்து உமருக்கு நற்கூலியை வழங்காதிருக்கட்டுமாக! அவர் கலீஃபா ஆனதிலிருந்து எனக்கு அவரிடமிருந்து எந்த நன்கொடையும் கிடைக்கவில்லை' என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'உமருக்கு உங்களுடைய நிலைமைகளைப் பற்றி எப்படித் தெரியும்?' என்று கேட்டார்கள்.

அந்தப் பெண், 'சுப்ஹானல்லாஹ்! ஒருவர் மக்களுக்கு ஆளுநராகி விட்டு, தன்னுடைய கிழக்கிலும் மேற்கிலும் என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியாமலிருக்கும் என்று நான் நினைக்கவில்லை' என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். அன்னார், 'அந்தோ உமர்! எத்தனை பேர் வாதம் புரிபவர்கள் இருப்பார்களோ! ஒவ்வொருவரும் உன்னை விட அதிகம் மார்க்கத்தைப் புரியக்கூடியவர் ஆவார்' என்று கூறினார்கள். பிறகு அன்னார் அந்தப் பெண்ணிடம், நீ உன் மீது அநீதியிழைக்கப்பட்டதற்கான உரிமையை

எவ்வளவு விலைக்கு விற்கிறாய்? நான் உமரை நரகத்திற்குச் செல்வதிலிருந்து காப்பாற்ற விரும்புகிறேன்' என்று கூறினார்கள்.

அந்தப் பெண் முதலிலோ அதைப் பரிகாசமாகக் கருதினாள். பிறகு 25 தீனாரை ஏற்றுக் கொண்டாள். இதற்குள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களும் அங்கு வந்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அமீருல் முஃமினீன் (நம்பிக்கைக் கொண்டவர்களின் தலைவர்) என்று கூறி அழைத்தார்கள். இதைக் கேட்ட அந்தப் பெண் அச்சமடைந்தார். ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'உன் மீது எந்தக் குற்றமும் இல்லை' என்று கூறினார்கள். இதற்குப் பிறகு அன்னார் இவ்வாறு ஒரு மடலை எழுதினார்கள்:

'இன்று உமர் இன்ன பெண்மணியிடமிருந்து அவள்மீது இழைக்கப்பட்ட அநீதிக்கான உரிமையை 25 தீனாரில் வாங்கிக் கொண்டார். அவள் கியாமத் நாளன்று அல்லாஹ்வுக்கு முன் வாதம் செய்தால், உமர் அதற்கு பொறுப்பாளி ஆக மாட்டார். அலீ மற்றும் அப்துல்லாஹ் இதற்கு சாட்சிகளாவார்கள்.'

அன்னார் அந்த மடலை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொடுத்து, 'நான் உமக்கு முன்னர் மரணித்து விட்டால், இந்த மடலை என்னுடைய கப்ரில் வைத்து விடுங்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது மகன் ஆஸிமுக்கு ஒரு பெண்ணுடன் அந்தப் பெண்ணுடைய உண்மையைப் பார்த்துத் திருமணம் முடித்து வைத்துவிட்டார்கள். ஒரு நபரை சந்தையில் வழியிலிருந்து விலக்குவதற்காகத் தமது சாட்டையால் சைகை செய்தார்கள். அந்தச் சாட்டை லேசாக அவருடைய ஆடையில் பட்டுவிட்டது. ஓராண்டுக்குப் பிறகு அந்த நபருக்கு 600 திர்ஹம் கொடுத்து இது அதற்குப் பரிகாரமாகும் என்று கூறினார்கள். அன்னார் சந்தையில் பொருள்களின் விலை யாருடைய சமூக உரிமையும் பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும் என்பதையும் பார்த்து வந்தார்கள்.

ஒருவர் தனது மகள் தொடர்பாக, 'முந்தைய வாழ்வில் அவள் தவறிழைத்து விட்டாள். ஷரீஅத்தில் அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட தண்டனைகளில் ஒரு தண்டனை அவளுக்கு விதிக்கப்பட்டது. அவள் தற்கொலை செய்து கொள்வதற்கும் முயற்சி செய்தாள். ஆனால், இப்போது அவள் தௌபா செய்து விட்டாள். திருமணத்திற்காக அவளை வரன் கேட்டு வருபவர்களிடம் அந்த அனைத்தையும் பற்றிக் கூற வேண்டுமா?'என்று கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ் அவளது குறைகளைத் திரையிட்டுள்ளான். நீ அதை வெளிப்படுத்த விரும்புகிறாயா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீ அவ்வாறு செய்தால், நான் உன்னை முழு நகர மக்கள் முன் படிப்பினைக்குரிய அடையாளம் ஆக்குவேன் என்று கூறினார்கள்.

ஹிஜ்ரீ 17 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து சிரியாவுக்குப் பயணமானார்கள். ஸரஃக் எனும் இடத்தை அடைந்தார்கள். அங்கு அன்னாருக்கு ரம்லாவுக்கும் பைத்துல் மக்தஸுக்கும் வழியில் 6 மைல் தொலைவில் அம்வாஸ் எனும் ஒரு நகரம் இருப்பதாகவும் அங்கு பிளேக் நோய் வந்திருப்பதாகவும் தெரிய வந்தது. அந்தத் தொற்று நோய் சிரியா முழுவதையும் தனது பிடிக்குள் கொண்டு விட்டது. 25 ஆயிரத்துக்கும் அருகில் மரணங்கள் ஏற்பட்டன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அத்தருணத்தில் எவ்வாறு மக்களைப் பற்றிக் கவலை பட்டு வந்தார்கள். அதைப் பற்றிய குறிப்பு சஹீஹ் புகாரியின் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றை முன் வைத்தார்கள்:

‘‘தொற்று நோய் ஏற்பட்டிருக்கும் இடத்திற்குச் செல்லாதீர்கள். நீங்கள் இருக்கும் இடத்தில் (தொற்று நோய்) ஏற்பட்டால் அங்கிருந்து ஓடி வெளியேறாதீர்கள்.’’

இந்தத் தொற்று நோயின் விளைவால் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களும் சிரியாவில் அவர்களின் பிரதிநிதியான ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களும் வஃபாத் ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் முஆஸ் தமது பிரதிநிதியாக ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களை நியமித்திருந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் மக்களிடம், ‘மலைகளில் பதுங்கி உங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்’ என்று கூறினார்கள். இவ்வாறு தொற்று நோய் சிறிது சிறிதாகக் குறைந்து முடிந்து போனது. இந்தத் தகவல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குக் கிடைத்த போது அது அன்னாருக்கு மிகவும் பிடித்து விட்டது.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் போக, ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாம் (ரலி), ஹஸ்ரத் ஸுஹைல் பின் அம்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் ஸுஹைல் (ரலி) ஆகியோரும் இதர கண்ணியத்திற்குரியோரும் இந்தத் தொற்று நோயினால் வஃபாத் ஆனார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்களில் இவ்வாறு குறிப்பு கிடைக்கப் பெறுகிறது: ஒருமுறை கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. அப்போது அன்னார் (மழை வேண்டி தொழப்படும்) இஸ்திஸ்க்கா தொழுகை தொழவைத்தார்கள். இறைவனிடம் துஆ கேட்டார்கள். அப்போது உடனடியாக மழை பொழிந்தது.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன் எகிப்து மக்களிடம் ஒரு சம்பிரதாயம் இருந்து வந்தது. அதாவது, நைல் நதி வற்றிவிடும் போது அவர்கள் ஒரு கன்னிப் பெண்ணை அலங்கரித்து நதியில் வீசிவிடுவார்கள். இஸ்லாம் தோன்றிய பிறகு நைல் நதி வற்றிய போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துஆ செய்து ஒரு துண்டுச் சீட்டை அனுப்பி வைத்தார்கள். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: ‘நைல் நதியே! உன்னை அல்லாஹ் இயக்குகின்றான் என்றால், அவன் உன்னை இயக்கட்டும் என்று நான் துஆ செய்கிறேன்.’ அன்னாருடைய கட்டளையின் படி அந்தத் துண்டுச் சீட்டு நதியில் போடப்பட்டது. அப்போது நதி ஓட ஆரம்பித்து விட்டது.

ஹஸ்ரத் ஸாரியா அவர்கள் இஸ்லாமிய படையுடன் துன்பத்தில் ஆழ்ந்த போது மதீனாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவில் இந்தச் சொற்கள் வந்தன:

‘يا سارية الجبل’ (ஸாரியாவே! மலை) இந்தச் சொற்கள் ஹஸ்ரத் ஸாரியா அவர்களுக்குப் போர்க்களத்தில் கேட்டன. இவ்வாறு முஸ்லிம்கள் ஒரு பெரும் அழிவிலிருந்து பாதுகாப்பாக இருந்தார்கள்.

ஒருமுறை ரோமாபுரியின் சீஸருக்குக் கடுமையான தலைவலி ஏற்பட்டு விட்டது. அது ஆயிரம் சிகிச்சைகள் செய்தும் சரியாகவில்லை. இறுதியில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு பழைய, அழுக்குப் படிந்திருந்த தொப்பியை பரக்கத்துக்காக அணிந்ததன் மூலம் இறைவன் அவனுக்கு குணமளித்தான்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள்: அல்லாஹ்வே! நல்லவர்களோடு என்னை மரணிக்கச் செய்வாயாக! என்னை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக! அல்லாஹ்வே! என்னுடைய வயது அதிகரித்து, ஆற்றல் குறைந்து விட்டது. என்னுடைய பிரஜை பரவி விட்டது. நீ என்னை வீண் போக விடாமல் மரணிக்கச் செய்வாயாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்தத் துஆவைக் கற்றுக்

**கொடுத்திருந்தார்கள்: அல்லாஹ்வே! என்னுடைய அகத்தை என்னுடைய புறத்தை விடச் சிறந்ததாக ஆக்குவாயாக! மேலும் என்னுடைய புறத்தையும் சிறந்ததாக ஆக்குவாயாக!**

**ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: பஞ்ச காலங்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தாம் செய்து வந்திராத ஒரு புதிய பணியை செய்தார்கள். அது என்னவென்றால், மக்களுக்கு இஷா தொழவைத்த பிறகு தமது வீட்டிற்குள் நுழைவார்கள். மேலும், இரவின் இறுதி வரை தொடர்ச்சியாகத் தொழுது வருவார்கள். பிறகு அன்னார் வெளிவருவார்கள். மதீனாவின் சுற்றுவட்டாரங்களில் வலம் வருவார்கள். ஓர் இரவு சஹ்ர் வேளையில் அன்னார் இவ்வாறு துஆ செய்வதை நான் கேட்டேன்:**

اَللّٰهُمَّ لَا تَجْعَلْ هَلَاكَ اُمَّتَ مُحَمَّدٍ عَلٰى يَدَىَّ

**‘அல்லாஹ்வே! என்னுடைய கைகளால் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் சமுதாயத்தை அழிவில் ஆழ்த்தி விடாதிருப்பாயாக!’**

**ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வழக்கமாக இந்த விஷயம் இருந்து வந்தது. அதாவது, ஸஃப்புகளை (வரிசைகளை) நேராக்குவதற்காக ஒரு நபரை நியமித்து வைத்திருந்தார்கள். தொழுகைக்காக இகாமத் கூறப்படும் போது கிப்லாவின் பக்கம் முதுகைத் திருப்பி அதாவது மக்களை நோக்கி முகந்திருப்பி ஸஃப்புகளை (வரிசைகளை) நேராக்கச் செய்வார்கள். நீங்கள் உங்கள் ஸஃப்புகளை (வரிசைகளை) நேராக வையுங்கள் என்று கூறுவார்கள். ஸஃப்புகள் (வரிசைகள்) நேரான பிறகு அன்னார் கிப்லாவை நோக்கி முகந்திருப்பி அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள்.**

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் வழியில் மிக அதிகமாக செலவு செய்யக்கூடியவராக இருந்தார்கள். இறைவன் மீதான அச்சத்தின் நிலை எப்படி இருந்ததென்றால், வஃபாத் நேரத்தில் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அன்னார், ‘நான் எந்த அருட்கொடைக்கும் உகந்தவன் அல்ல; நான் தண்டனையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்’ என்று கூறி வந்தார்கள்.**

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* **இன்னும் சிறிது விஷயங்கள் இருக்கின்றன. அவை இனிவருங்காலங்களில் எடுத்துரைக்கப்பட்டு விடும். இன் ஷா அல்லாஹ்!**

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ

لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمکم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ

وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)**